குமரகுருபரன்



3] சுபகிருது-ஃஸு புரட்டாசி-மீ 1ம்-உ (17-9-62) [இதழ்

பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13 | சுபகிருது-௵ புரட்டாசித் திங்கள் 1-ம் ௳ [17-9-62] | இதழ் 9

திருவுந்தியார் - விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

[மலர் 13. இதழ் 8-ன் தொடர்ச்சி]

14. கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை யுடனேநின் றுந்தீபற
உன்னையே கண்டதென் றுந்தீபற.

(வி-ரை) பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து உள் நின்றுணர்த்தி வரும் திருவருளை, ஞானாசிரியனின் பெருங்கருணையினால் கண்டு, அத்திருவருளையே துணையாகக் கொண்டு நடக்க வேண்டும் என்பதாம். அங்ஙனம் நடப்பது உயிர்கள் தன்னைத்தான் புரிந்து கொண்டு நடப்பதாகும் என்றவாறு.

உயிர்களுக்கு அநாதியே உள் நின்று உணர்த்தி வருவது திருவருளாகும். அதனையே ஈண்டு கிழவி என்ற சொல்லால்

குறிக்கின்றார். தரையில் நடப்பவர்கள், தாம் நடப்பதற்குத் தரையே ஆதாரம் என்று நினையாராயின் அது எவ்வளவு மடமையோ, அதனைப் போன்றே திருவருள் ஆதாரமாக உயிர்கள் இயங்கியும், அத்திருவருள்தான் தாம் இயங்குதற்குக் காரணம் என்பதை அறியாத உயிர்கள் இயல்புமாகும்.

"தரையை யறியாது தாமே திரிவார்
புரையை யுணரார் புவி."
"இற்றை வரையிசைந்தும் ஏதும் பழக்கமிலா
வெற்றுயிர்க்கு வீடு மிகை."

என்றும் திருவருட் பயனும் இவ்வுண்மையை விளக்கி நிற்கும்.

15. பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை யறுப்பர்என் றுந்தீபற
பாவிக்க வாரார்என் றுந்தீபற.

(வி-ரை) யான் எனது என்னும் அகப்புறப் பற்றுக்களை நீக்க வல்ல இறைமை இறைவனுக்கே யுண்டு. ஆதலின் இறைவனையே பற்றுக் கோடாகக் கொண்டு, அவ்வகப்புறப் பற்றுக்களை நீக்க வேண்டும் என்பதாம். அவ்விறைவனையும் அவனது திருவருளாலேயே காண இயலுமதன்றிப் பாவனையால் எய்த இயலாதாம் என்ற வாறு.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்னும் திருக்குறளும்,

"மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன்

என்னும் சுந்தரர் தேவாரமும், 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் திருவாய்மொழியும், 'யான் எனது என்று அற்ற இடமே திருவடியா' என்னும் குமரகுருபரர் வாக்கும் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியனவாம். இக்கருத்தினையே,

"பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றைப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனில்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
மற்றுமிது சொன்னேன் மதி".

என்னும் திருக்களிற்றுப்படியாரும் விளக்கி நிற்றல் காண்க.

16. "உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பர்என் றுந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற"

(வி-ரை) உலகியற் சூழலிற் கருத்தைச் செலுத்தாது, திருவருளையே உணர்ந்து அநுபவிக்கும் யோகிகள், தமக்கு ஒரோவழி இன்பத் துன்பங்கள் எய்தினும் அவற்றிற்காக மனந்தளர மாட்டார்கள். அங்ஙனம் அவர்கள் அசைவற்றிருக்கும் நிலைக்கு உவமை தரையில் வைக்கப்பட்ட மணியின் நாவாகும் என்றவாறு.

தரையைத் தாரகமாகக் கொண்டிருக்கும் மணி அசைவற்று இருப்பது போலத் திருவருளைத் தாரகமாகக் கொண்டிருக்கும் யோகியர்களும் "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று அசைவற்றிருப்பார்கள் என்பதாம். நன்றாங்கால் நல்லவாக்காணின், அன்றாங்கால் அல்லற்பட வேண்டும். இன்பத்துள் இன்பம் விழையாதிருப்பின், துன்பத்துள் துன்பம் உற வேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய உறுதிப்பாடு திருவருள் வலிமையினாலேயே கிட்டும்.

"பொல்லாத தீவினையிற் போகார்கள் போனாலும்
எல்லாம் சிவன்செயலே என்றிருப்பர்"

என்னும் சிவபோகசாரமும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும். இக்கருத்தினையே,

"அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்று
அறிவின் அறிவழித்துக்கொண்டுஅவ் —வறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தவர்கள் மானுடரின் மாணவக
தாழ்ந்தமணி நாவேபோல் தான்"

என்னும் திருக்களிற்றுப்படியாரும் விளக்கி நிற்றல் காணலாம்.

(வளரும்)

குமரகுருபரர் காண்பித்த உயிரினங்கள்

திரு. P. பொன்னுசுவாமி அவர்கள், M. A.,
பிரவீண், பிரசாரக், சாயர்புரம்

கவிஞர்களின் கற்பனைக்கு எல்லையே கிடையாது என்று கூறுவர். கவிஞர்கள் உருவாகிறார்கள்; அவர்கள் உருவாக்கப் படுவதில்லை. (Poets are born, not made.) ஆகவே தாயின் கர்ப்பத்திலேயே கவிஞராகவும், கடவுளின் அடியாராகவும் உருவான நம் குமரகுருபரனார் இயற்கையை ஆராயும் தன்மையும், அதனைத் தமது செய்யுட்களில் கையாளும் முறையும் அலாதியாகும்.

நாம் இங்கு எடுத்துக் கொண்டது தெய்வப் புலவரின் திருக்குறளின் சார்பாக விளங்கும் நீதி நெறி விளக்கத்தில் குமரகுருபர சுவாமிகள், பிராணிகள், பறவைகளை எவ்வாறு தமக்கு உபயோகப்படுத்திக் கொண்டார் என்பதே. நீதி நெறி விளக்கத்தில் காப்புச் செய்யுளாக அமைந்த செய்யுளே சுவாமியவர்கள் இயற்கையில் கொண்ட ஈடுபாட்டை விளக்குகின்றது.

பாருங்கள் முதல் முதலிலேயே பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய அப்பு(தண்ணீர்)வை எடுத்துக் கொண்டு மானிட வாழ்க்கையைத் தெள்ளிதில் விளக்கி விட்டார்.

> நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
> நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்
> நீரில் எழுத்தாகும் யாக்கை........

என்னே இவரது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலின் தன்மை. இந்தச் செய்யுளைப் படித்தவர் எப்பொழுதும் ஓர் நீர்க் குமிழியைப் பார்த்தாலும் தன் இளமையின் நிலையாமையும், நீரெழுத்துப் போன்ற தன் யாக்கையையும் நினைத்து நினைத்து ஆண்டவனை அணுகுகின்றனர். இளமையையும், தன் செல்வத்தையும், தன் பலமுடைய உடம்பையும், பலமாகக் கொண்டு

இறைவனை மறந்து திரியும் எத்தர்களுக்கு மண்டையில் பலமான அடி கொடுத்து விட்டுத்தான் மேற் சொல்லுகின்றார் நம் குமர குருபரர். நீரைக் கொண்டு நல்ல செய்தியைப் போதித்தவர் விலங்கினங்களைக் கொண்டும் பறவையினங்களைக் கொண்டும் என்ன போதிக்கின்றார் என்று பார்ப்போம்.

அறிவிலிகள் தங்கள் முட்டாள்தனமான வார்த்தைகளால் சபை அஞ்ச வேண்டியதில்லை என்று சுட்டிக்காட்டும் தன்மையைச் சுவாமியவர்கள் புல்லால் அமைத்த கோமாளியைக் கண்டு பறவையினங்கள் பயப்பட வேண்டியதில்லை, எனினும் அவை பயப்படுகின்றன என்று கூறும் ஆற்றால் முட்டாள்கள் கோமாளிப் பொம்மையைவிடக் கீழானவர்கள் என்று காட்டிய தன்மை கண்டு உணரற்பாலது.

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன் மினென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

அடுத்தபடியாகப் பூனையனைய மாந்தர்களையும் யானையனைய மாந்தர்களையும் ஒப்பிட்டுப் பேசும்பொழுது சுவாமிகள் பூனையனையவர்கள் வெட்கித் தலை குனியுமாறு செய்யும் படியாக ஓர் எடுத்துக் காட்டு உவமையணியை அமைத்துப் பாடுகின்றார். இதோ செய்யுள்,

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குகப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புரத்துப் பூனை புறங்கடைய
கந்து கொல் பூட்கைக் களிறு.

பூனை அந்தப்புரத்தில் எல்லோருடனும் பழகியும் உண்டு தீர்க்கத் தான் உதவுகிறது. ஆனால் களிறோ தலை வாயிலில் மிகுந்த தொலைவில் கட்டப்பட்டிருந்தாலும் போர்க்களத்தில் அரசனுக்கு உதவி செய்கிறது. மதிப்பும் களிறுக்கே. பூனை உதை வாங்கு வதற்குத்தான். இங்கே கல்விக் கேள்விகளில் மேலோரை யானையோடும், கல்வி அறிவு ஒழுக்கங்கள் இல்லாதவர்களைப் பூனைக்கும் ஒப்பிட்டமை காண்க.

அறிவிலிகள் தங்களின் அழிவு தம்மை நெருங்கி வந்தாலும் கண்டு உணர மாட்டார்கள். வந்தபின் காப்பவர்களல்லவா? இதற்குஎடுத்துக்காட்டாகச் சுவாமிகள் எடுத்துக்கொண்ட மலைப் பாம்பின் தன்மையைப் பார்க்கும்போது சுவாமியவர்களின் ஆழ்ந்த அறிவும் இயற்கையின் நுகர்வும் பிராணிகளின் இயற் கைக் குணங்களை ஆராய்ந்தறிந்திருந்த தகைமையும் நம்மை வியப்புக்குள் ஆழ்த்துகின்றன. கீழ்மக்கள் எப்படி இருக்கிறார் களாம்—

—மண்டெரி

தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமுச் செறிந்து.

அரசியல்பு கூறவந்த சுவாமிகள் கோனைக் களிறுக்கும் குடிகளை எறும்புக்கும் ஒப்பிட்டுள்ளார். களிறானது தனது கவளத்தில் ஓர் சிறிது கீழே விழுந்தாலும் கவலையுறாது. ஆனால் அச்சிறிதிலே எறும்பு போன்ற உயிர்கள் உய்கின்றன.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றாங்கும் களிறோ துயருறு—ஆங்கதுகொண்
டுரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

பெரியோர்கள் இறைவனிடம் வேண்டுவதெல்லாம் இறைவா! துன்பமில்லா இறப்பைக் கொடு என்பதே. ஆனால் வீணர்கள் இந்த நீரில் எழுத்தாகும் யாக்கையை நீக்கு வதற்கு துன்புறும் செய்கையை விளக்குவதற்கு சுவாமியவர்கள் மெய்யில் உண்டாகும் புண்ணில் புழுநெளியும் காட்சியை நம் முன்னால் காட்டவும் நம் உள்ளம் நெக்குவிட்டுவிடுகிறது. வீணர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கூறுகின்றார். பாருங்கள்.

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பார்............

சிறிய பகையை மறந்து, அதை ஒரு பொருட்படுத்தாமல் விட்டு விடுவதுதான் மேலோரின் மாண்பு. ஆனுல் சில கீழ் மக்கள் சிறிதையும் பெரிது படுத்திப் பகைமையை மறக்காமல் இருக்கிருர்கள். அத்தகையோரை உணர்த்துவதற்காக ஒரு சிறிய தவளேயை உவமையாகக் கொண்டு நீரில் பெரிய யானே யின் நிழலேக் கூட, அது குதிப்பின், இல்லாமல் செய்துவிடும் என்று கூறிய வாற்ருல் விளக்குகின்ருர்.

......................................நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளே குதிப்பினும்
யானே நிழல்காண்ப தரிது.

“புலி பசித்தாலும் புல் தின்னுது” என்பது பழமொழி. அப்பழமொழியைச் சுவாமியவர்கள் பெரியோர்களின் இயல் போடு ஒப்பிட்டுக் காட்டினமை நோக்கற் பாலது.

நல்லா ரொழுக்கின் றலேநின்ருர் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

காட்டுப் பசுவைக் கொண்டு நமக்கு ஒரு பாடம் கற்பிக் கின்ருர், பாருங்கள். காட்டுப் பசுவானது தனது நாவினுல் இன்பமுறநக்கி,நக்கப்படுவோர்க்குத் தீங்கிழைப்பதைப்போன்று தீயவர்களின் செயல்களின் நன்மையுண்டாயினும் அத்தன்மை யும் தீயதேயாகும் என்பதை,

—தீயன
நல்வன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல்.

என்று கூறி விளக்குகிருர்.

இல்லாள் திருமகளேக் காட்டிலும் அழகுடையவளேனும், சில திருக்குலேந்த மாந்தர்கள் பிறர் மனேக்கே ஏகி நிற்பர். அத்தகையாரின் செயல்கள் நல்ல, இனிய நறுமண மிகுந்த

உணவு வாயிலிருந்த போதிலும் அதை உமிழ்ந்து விட்டுக் கசப்பையே தின்னும் தீய விலங்குகளை ஒத்திருக்கிறது என்பதை,

—நறுவிய

வாயின வேறு முமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

இவ்வாறு உயிரினங்களைக் கொண்டு மனுக்குலம் கற்க வேண்டியது எத்தனையோ உண்டு என்பதை நம் குமரகுருபரர் மூலமாக அறிகிறோம்.

வாழ்க நம் குமரகுருபரரின் திறன்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13, இதழ் 8-ன் தொடர்ச்சி]

I

SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

22. மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே.

Once, says a story, when Sambandar was about to contend with the Jains, the queen feared the consequences which might befal him, but he assured her in this verse that he could dare all when his God of M dura was on his side.

22. O fair one with the deer's glance meek,
        Pandya's great queen, think not of me
    As of some sucking infant weak,
        Because such wicked foes there be.
    If only Hara by me stand;
        Stronger am I than all their band.

(To be Continued)

மணிமேகலை

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ்விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

தமிழணங்குக் கணிசெய்யும் ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி என்ற மூன்று மட்டுமே முழுமையாகக் கிடைத்துள்ளன. இவற்றுள் சிந்தாமணி, தனது பெயருக்கேற்ப, சீவகனின் வீரவரலாற்றைக் குறிக்கிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பெண்பாத்திரங்களையே தலைமையாகக் கொண்டு இயல்கின்றன. கன்னியாய், காதன் மனைவியாய், கணவனைக் காதற்பரத்தை ஒருத்திக்குத் தந்து வருந்தியவளாய், காதலனுடன் வேற்றூர் புகுந்து, கணவன் கொலைக்களப்படக் கண்கலங்கியவளாய் வஞ்சினம் கொண்டு மதுரையை எரித்த கண்ணகியைப் பற்றிக் கூறுகிறது சிலப்பதிகாரம். அந்த நூலில் காணும் மாதவியின் மகளாய், தந்தை கொலைக்களப்பட்டதால் தாய் துறவு பூணத் தானும் துறவுநிலை மேற்கொண்டு, சோழ இளவரசனுற் காதலிக்கப் பட்டும், அதிற்கருத்தூன்றுமல், மணிபல்லவம் முதலிய தீவுகளுக்குச் சென்று பழம் பிறப்புணர்ந்து, அமுத சுரபியால் பசிப்பிணி போக்கிப், புத்தசமயம் தழுவிய மாதொருத்தியின் கதையைப் புனைகிறது, மணிமேகலை. புத்தசமயத்தைத் தழுவி நின்று, பிறமதங்களைக் கண்டித்து வாழ்ந்த ஒரு பெண்ணின் கதையைக் கூறுகிறது குண்டலகேசி என்று குறிப்பிடுவார்கள். ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றன 'நீலகேசித்தெருட்டு' சமணப் பெண்ணொருத்தியின் வரலாற்றைத் தெரிவிக்கிறது. இவ்வனைத்திலும் தனிச் சிறப்புடன் வாழ்பவள் மணிமேகலையேயாம்.

'காப்பியப் பெண்கள்' என்ற தொடரில் ஒலிபரப்பப்பட்டது, வானொலியாரின் இசைவு பெற்றது.

கோவலன் இறந்துபட, மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்கிறார்கள். மணிமேகலை பூக்கொய்ய மலர்வனம் செல்கிறாள். மலர் வனத்திலிருந்த அவளை நாடி, சோழ இளவரசனான உதய குமரன் செல்கிறான். மணிமேகலை அஞ்சி மறைகிறாள். துணை வந்த சுதமதி உதயகுமரனுக்கு மணிமேகலையின் துறவியல் பினையும் தன் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறாள். பின்னர் மாலையில், மணிமேகலாதெய்வம் மணிமேகலையை மட்டும் மணி பல்லவத் தீவுக்கு எடுத்துச் சென்று அவளை அங்கே விட்டு நீங்குகிறது. காலையில் கண் விழித்த மணிமேகலை முன்னால் புத்த பீடிகை ஒன்று காணப்படுகிறது. அவள் அதனை வணங்கித் தனது பழம் பிறப்பையுணர்கிறாள். குறையாது சோறு வழங் கும் அமுத சுரபி, ஆபுத்திரன் கையில் இருந்தது என்றும், முற்பிறப்புணர்ந்த தன்கைக்கு அதுவரும் என்றும் தீவதிலகை கூற, மணிமேகலை அறிகிறாள்.

'தீவ திலகை தன்னொடும் கூடிக்
கோமுகி வலஞ்செய்து கொள்கையின் நிற்றலும்
எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுந்தகை மரபிற் பாத்திரம்' புகுந்தது.
'பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம்
பிச்சை யேற்றல் பெருந்தக வுடைத்து'

என அறிந்து, மணிமேகலை அமுதசுரபியோடு ஆதிரையின்பால் செல்கிறாள்.

'தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியோடு
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
'பாரக மடங்கலும் பசிப்பிணி அறுக'என
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்'

மணிமேகலை பசித்தோர் அனைவர்க்கும் உணவூட்டுகிறாள். பன் னெடுங்காலமாய்ப் பசிப்பிணியால் வருந்தியிருந்த காயசண்டி கைக்கு உணவளித்து, அவளது யானைத் தீயைப் போக்குகிறாள். உலக அறவியில் பசிப்பிணி தீர்க்கும் நல்லறம் மேற்கொள் கிறாள். தன்னைக் காதலித்து வந்த உதயகுமரனுக்கு யாக்கை நிலையாமை கூறி அனுப்பிவிட்டு, மந்திரத்தால் காயசண்டி

கையின் வடிவில் உலவி வருகிறாள். அவளை வஞ்சனையால் அடையக் கருதிய உதயகுமரன் இடையிருள் யாமத்திலே அங்கு வருகிறான். மணிமேகலை காயசண்டிகையின் வடிவில் இருந்ததையறியாத காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் உதயகுமரனை வெட்டி வீழ்த்துகிறான்.

மணிமேகலையால் தன்மகன் இறந்தது கேட்ட இராசமா தேவி அவளைச் சிறையில் இருத்துகிறாள்; வஞ்சனையால் துன் புறுத்தக் கருதிப்பலவாறு முயல்கிறாள்; அம்முயற்சி பயனளிக்க வில்லை. இந்திரவிழாவில் பங்கு கொள்ளுமாறு, மணிமேகலை யின் பாட்டியான சித்திராபதி மணிமேகலையை வற்புறுத்து கிறாள். மணிமேகலையோ அறவண அடிகளிடம் நல்லறம் கேட்டு, வான்வழியாகச் சாவகநாடு சேர்ந்து, புண்ணிய ராசனின் வரலாற்றை யறிகிறாள். பின்னர் இந்திரவிழா மறந்த தால் காவிரிப்பூம்பட்டினம் கடலில் மறைய, அறவண அடி களும் மாதவியும் சுதமதியும் வஞ்சிநகர் சேர்ந்ததைத் தீவ திலகை சொல்லக் கேட்டு, மணிமேகலை வஞ்சிநகர் சென்று, கண்ணகியை வணங்குகிறாள். பின்னர் கண்ணகி,

'நறைகமழ் கூந்தல் நங்கை நீயும்
முறைமையின் இந்த மூதூ ரகத்தே
அவ்வவர் சமயத் தறிபொருள் கேட்டு
மெய்வகை யின்மை நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவாய்'.–

என்று கூற, அவ்வாறே மணிமேகலை சமயக்கணக்கர் தம்திறம் கேட்கத் தொடங்குகிறாள்.

மாற்றுருவில் சமயத்திறம் கேட்ட அவள், கச்சி நகர் சென்று அறவண அடிகளிடம் அறம் கேட்கிறாள். புத்தசமயக் கொள்கைகளையும் புத்தர் பெருமையையும் ஐயம்திர வுணர் கிறாள்.

'தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனள்.'

இது மணிமேகலையின் வரலாறாகும்.

(தொடரும்)

மெய்ப்பொருள் நாயனர்

திரு. சி. முனிரத்தினம் அவர்கள்,
புலவர் இறுதி நிலை, சி. பா. சு. தமிழ்க் கல்லூரி,
மயிலம்.

விநாயகர் வணக்கம்

பொன்னி னிறம்பெற்றப் புண்ணியன்ருன் நற்களிருய்க்
கன்னிப் பிடியுடனே காதலுற—மன்னியசீர்க்
குஞ்சரமாய்த் தோன்றுமொரு கொம்பானை யெப்போதும்
நெஞ்சாரப் போற்றிடுவாம் நின்று.

சிவபெருமான் வணக்கம்

நீர்கொண்ட நீள்சடை நின்மலன் சங்கர ஞுஞ்சிவனை
நீர்மலர் கொண்டு நிதந்தொழு மன்பராம் பத்தருக்கே
நீர்மை நிறையருள் செய்கின் றிறைவனு மீசனையே
சீர்பெற நாமெலா மிப்புவி தன்னில் வழுத்துவமே.

உமாதேவி வணக்கம்
(வேறு)

சீர்மேவு பொருப்புறையுஞ் சிவனுர் களிக்கக்
கார்மேவு பெருமானுக் கிளையாள் கன்னிப்
போர்மேவிப் புவியாண்ட புகழன் ஞளைப்
பார்மேவிப் பயன்பெறவே பணிதல் செய்வாம்.

முருகன் வணக்கம்

அணியாறு தலைக்கொண்டா னையன் றிருக்கண்
மணியாகப் பிறந்தசெவ் வேளை யெந்நாத்
துணிவாக யுரைத்தற்குத் தொண்டன் சரிதைப்
பணிவாகப் போற்றியுமே பகர்த லுற்றேன்

கலைமகள் வணக்கம்

மாலுந்தித் தடமலரோன் மறைநாவி லுறைகின்ற
நூலுந்துங் கலைமாதி னுன்னியநற் சேவடியெம்
பாலுந்தக் கவிமாண்புப் பார்த்தேயா ளுக்கிடவே
சேலுந்தும் நீருலகிற் சிந்தையுறப் போற்றிடுவாம்.

மெய்ப்பொருளார் வணக்கம்

(வேறு)

கைம்மா னவனின் கழலே பணிந்து
அம்மா வென்ன யரசே யருளும்
பெம்மா னருள்மெய்ப் பொருளான் புனிதன்
எம்மா னவனி னிணைதாள் தொழுவாம்.

அவையடக்கம்

(வேறு)

(தான தந்தன தானன தானன)

இருமை பெற்றிட இறைவனை யெண்ணியே
அருமை யாகப் பணிந்திடு மெய்ப்பொருள்
பெருமை யெல்லாம் வருவழி யாக்கினேன்
*ஒருமை வேண்டி யுரைத்து மகிழவே.

சேக்கி ழானடி சென்னி மேல்வைத்தவர்
ஆக்கி யக்கவி யின்முறை நோக்கியான்
பாக்களாகப் பகர்ந்தி டும்புன்கவி
நோக்கி யோர்க்கு நுண்மண லாகுமே.

வழிநூற் முறைப்படி யாக்கிடு மென்கவி
இழிமி கப்படி னிரித்துமே யான்றவீர்
†கெழிப டப்படுங் கருத்தினை யேற்றுமே
கொழித மிழ்ப்புல வீராண்ட ருள்வீரே.

---

* ஒற்றுமை, † பொருந்திய

நூல்

நாட்டுச் சிறப்பு

(வேறு)

(தனதானத் தனதானத் தனதானத் தான)

1. †ஒருமாவைக் கணப்போதில் வலமாகக் கொண்டு
வருமாறு வரையாக்கி வளவன்முதல் மூவர்
தருநாடாம் முனைநாட்டின் தழைத்துள்ள மேன்மை
பெருமாறு வழுவாமல் பெரியோரிற் சொல்வாம்.

2. அணிநந்தி வரைமீ தகிலாரந் தேக்குக்
கணிகொன்றை பலவும்நல் கழையான காடும்
தணிவானக் குயினங்கள் தரைகாணுத் தாங்க
பணிவேந்தன் பகையான படர்காலான் சீற.

(வேறு)

(தான தத்தனத் தானன்னத் தானன)

3. சீற்றத் தாலே சிதறியு மேகங்கள்
ஏற்றங் கொண்டு இடித்து,மே மின்னிட
கூற்ற னென்னக் குமுமிக் ‡கருத்தமால்
மாற்ற மாகிய மழையும் பொழியவே.

4. பொழித்த லானப் புவியிழி தாரைகள்
கொழித்த லானக் குவட்டினைத் தாக்கிடும்
செழித்த லானச் செகுத்திட நம்மைதான்
பழித்த லானப் பழியெனக் கொண்டுமே.

5. §கொண்டல் வானவன் நாட்டில் சுரபிபால்
விண்ட தன்னவே வீழ்நீ ரருவிகள்
மண்டி யார்த்துடன் மாமலர்க் கூட்டங்கள்
¶பண்டி பண்டியாய்ப் பாய்ந்தி ழிந்தவே.

6. இழிந்த தாரைக ளின்பனை யெண்ணியே
சுழிந்த தாரைகள் சொன்னது போலவே
ஒழிந்தி டாமல் ஒருங்கணைத் தோற்றமே
கழிந்த காதலர் கலந்த தொக்குமே.

---

† ஒரு குதிரை ‡ இந்திரன் § வண்டி. ¶ திருமால்

(வேறு)

7. கலந்தநல் லாரும் நங்கை கவின்மிகு குறிஞ்சி போக்கி
உலந்தவன் பாலை மற்றும் உகந்ததம் மருத முல்லை
*வலந்தநன் ஞால மாக்கி வளம்பல மிகவே கூட்டி
†புலம்பநன் றேனச் சேர புகுந்திடுங் காதலாலே.

8. பொன்பல பூவும் நெல்லும் புவிபட இரைத் தியார்த்து
நுண்ணிய மாக மெங்கும் நுரையெனு மங்கி போர்த்து
மன்பதை காக்க எண்ணி மலையமா னுடு தன்னில்
தென்பெண்ணை என்ற நாமம் திகழவே யோடி. னுளே.

9. தென்பெண்ணை நதியில் மேலும் திரண்டிடும் வெள்ள மெல்லாம்
மன்பெரு அணையில் தங்கி மதகினில் பாயுந் தோற்றம்
முன்னைய வினைக ளெல்லாம் முழுதுமாய்க் கூடி நின்று
பின்னைய பிறவி தோறும் பின்னமாய்ப் போதல் போலும்

10. பற்பல? கால்க ளாகப் பசுங்கரை யூடே யோடி
நெற்பயிர் காக்க எண்ணி நெளிதரச் செல்லும் மேன்மை
வெற்பினில் தங்குந் தேவன் விழைந்தபுல் மாற்றங் கொண்டு
கற்புடை மாதர் தொண்டர் களிக்கவே தோன்றல் மானும்.

11. இப்படி யாகச் சென்றி லங்கிடு பண்ணை தோறும்
கைப்படுங் கன்னி யன்னக் கவின்பெறு சொல்லும் புல்லும்
செப்பிடு வித்தை போலச் செழுமையாய்க் காண்ப தாலே
மைப்படு மேக மெல்லாந் தமதின மென்ன மாலும்.

12. வளங்கெழு வயல்கள் யாவும் வாளைகள் துள்ளப் பின்னும்
களங்கிடும் பாசி யோடு கமலமும் நீல மல்லி
வளந்திடும் பயிர்களுக் கோர்த னையெனக் காண்ப தாலே
இளநகை மடந்தை யாருங் களைகளைக் களைதல் செய்வார்.

15. ஐவிழி யங்கை யார்கள் அரவிந் தங்கையி லேந்தி
மைவிழி மங்கை யார்கள் மைமலர் மதுவை மாந்தி
தைவழி கூந்தல் சார்த்தி தகுதிலா தடைக ளாக்கி
கைவழி பரித்தல் செய்யும் களைகளைக் கரையிற் சேர்ப்பார்.

(வளரும்)

* வலந்த = கோமுத்த. † நெய்தல் தலைவன் (கடல்)

மதுரைக் கலம்பகம் உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
"திருவண்ணுமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"
வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

மலர் 13. இதழ் 8-ன் தொடர்ச்சி

குறுமுயலுஞ் சிலகலையு மிழந்தொருமா னுயிரைக்
கொள்ளைகொள்ள வெழுந்தமதிக் கூற்றே யாற்ருச்
சிறுதுயிலும் பெருமுச்சுங் கண்டுமிரங் கலையாற்
றெறுமறலி நீயேயித் தெண்ணி லாவு
மெறியுநெடும் பாசமே யுடலுமறக் கூனி
யிருணிறமு முதிர்நரையா லிழந்தாய் போலு
நறுநுதலா ரென்கொலுனை மதுரேசர் மிலைச்சு
நாகிளவெண் டிங்களென நவில்கின் ருரே. 89

சிறிய முயலையும் சிலகலைகளையும் நீங்கி மான்போன்ற ஒப்பற்ற இத்தலைவியின் உயிரைக் கொள்ளை கொள்ளுதற்கு எழுந்த திங்களாகிய கூற்றுவனே! பொறுக்க முடியாத இவளது சிறிய தூக்கத்தையும் பெரிய மூச்சையும் பார்த்துங் கூட நீ இவளுக்கு மனம் இரங்குகின்ருயில்லை. உயிர்களைக் கொல்லுகின்ற எமன் நீயே ஆவாய். இந்தத் தெள்ளிய நில வொளியும் எமனுகிய நீ உயிர்களின் மேல் வீசுகின்ற நீண்ட பாசக்கயிறே ஆகும். முதிர்ந்த நரையை உடைய கிழத்தன்மை யால் உடம்பு முழுவதும் வளையப் பெற்றுக் கருநிறம் நீங்கி வெண்ணிறம் அடைந்தாய் போலும்! அழகிய நெற்றியை உடைய இளம் பெண்கள் உன்னை என்ன காரணத்தால் மதுரைத்

தலைவராகிய சொக்கேசர் முடியிற் சூடுகின்ற மிக இளமை யுடைய வெண்ணிறமுள்ள சந்திரன் என்று சொல்லுகின்றார் களோ தெரியவில்லை.

நவ்வியங்கண் மானுமானு மினிதுகந்தி டங்கொள்வார்
        நஞ்சமார்ந்தென் னெஞ்சமார்ந்து நனிகளங்க றுத்துளார்
கைவ்விளங்கு குன்றுமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
        கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்
கோவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
        குளிர்தாங்க வைகைநீர்கு டைந்துடன்றி ளைத்திராற்
பைவ்விரிந்த வல்குலீர்நும் மன்னைமார்கள் சங்கையிற்
        படிலவர்க்கு வீணினீவிர் பரிகரித்தல் பாவமே. 90

மானின் பார்வையை ஒத்த அழகிய பார்வையையுடைய பெண்ணாகிய உமாதேவியையும் மானையும் இனிமையோடு விரும்பி இடப்பக்கத்தில் கொண்டவரும் நஞ்சைக் குடித்து எனது மனத்தை விரும்பி நன்றாகக் கண்டம் கருத்து உள்ள வரும் (மனக்குற்றத்தை, நீக்கி அருளியவரும்) கையில் விளங்கு கிற மேருமலையையும் வெள்ளியம்பலம், பொன்னம்பலங்களையும் பெரிய வில்லாக வளைத்துள்ளவரும் (தாம் விரும்பும் கோயிலாகக் கொண்டு கூத்தாடுபவரும்) பாண்டிய நாட்டை உடையவரும் மதுரையிலே வாழ்பவரும் கைலாய மலையை உடையவருமாகிய சொக்கேசப் பெருமானது மலையை ஒத்துச் சிறந்த பெண்களே! கொவ்வைப் பழம் போலச் சிவந்த உமது அதரங்கள் வெளுக்க வும், மைதிட்டிய கரிய கண்கள் சிவக்கவும் குளிர்ந்த அலைகளை உடைய வைகையாற்றின் நீரில் மூழ்கி உடனே அதில் குடைந்து விளையாடுகின்றீர்கள். பாம்பின் படம் போல விரிந்த அல்குலை உடையவர்களே! உமது அன்னைமார்கள் சந்தேகப் பட்டால் அவர்களுக்கு வீணாக நீங்கள் சந்தேகத்தைப் போக்கும் படியாகுதல் கொடுமையே ஆகும்.

பாமிக்குப் பயின்மதுரைப் பரஞ்சுடரே யொருத்திகயற்
        பார்வை மட்டோ
காமிக்கு மடந்தையர்கட் கயலெலா முமையடைதல்
        கணக்கே யன்றே

மாமிக்குக் கடலேழும் வழங்கினி ரொருவேலை
　　மகனுக் கீந்து
பூமிக்குட் கடலைவறி தாக்கினீர் பவக்கடலும்
　　போக்கி னீரே. 91

செந்தமிழ்ப் பாடல்கள் மிகுதியாக வழங்குகின்ற மதுரையம்பதியிலே எழுந்தருளிய மேலான ஒளிவடிவாயுள்ள சொக்கேசப் பெருமானே – நீர் உமது மாமியாராகிய காஞ்சனமாலை அம்மையாருக்கு ஏழு கடல்களையும் வழங்கியருளினீர். ஒரு கடலை (வேலாயுதத்தை) உமது மகனாகிய உக்கிர குமார பாண்டியனுக்குத் தந்தருளிப் பூமியிலே உள்ள கடலை வற்றும்படி செய்தீர். அடியார்களது பிறப்பாகிய கடல்களையும் ஒழித்தருளினீர். ஆதலால் மீனாட்சி அம்மையாகிய ஒருத்தியினது கயல் மீன் போன்ற கண்ணொன்று மாத்திரமோ? விருப்பம் கொள்ளுகின்ற பெண்களது கண்களாகிய கயல் மீன்களெல்லாம் உம்மிடம் வந்து சேருதல் முறையே அல்லவா?

நீரோடு குறுவெயர்ப்பு நெருப்போடு நெட்டுயிர்ப்பு
　　நெடுங்கண் ணீரிற்
பீரோடு வனமுலையுங் குறையோடு நிறையுயிரும்
　　பெற்றா ளன்றே
காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர்நறை
　　கமழ்பூங் கொன்றைத்
தாரோடு மனஞ்செல்லத் தாயோடுந் தான்செல்லாத்
　　தமிய ளானே. 92

கருநிறத்தையுடைய நஞ்சு தங்கிய நீலமணிபோன்ற கழுத்தை உடையவராகிய கடம்பவனத்திலே எழுந்தருளியுள்ள சொக்கேசப் பெருமானது மறுமணம் வீசுகின்ற அழகிய கொன்றைப் பூமாலையோடு தனது மனம் போய்விடத் தன் தாயுடன் தான் போக மாட்டாத அச் சொக்கநாதரை யன்றி வேறு கதியற்ற தனியளாகிய இத்தலைவி ஒழுகுகின்ற சிறிய வேர்வை நீர்த்துளிகளையும், நெருப்புப் போல வெப்பம் மிக்க பெருமூச்சையும், அகன்ற கண்ணீருடனே பசலை பரந்த அழகிய கொங்கைகளையும் குறையால் நிரம்பிய உயிரையும் பெற்றாள்.

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்ருள்
தடாதகா தேவியென் ஞெருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறஞு னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் புளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற் றூநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
ஐயநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூடல்
அடலரா வலங்கல்வே ணியனே. 93

வண்டுகள் யாழ் ஒலிபோன்ற ஒலியைச் செய்யத் தேனைச் சொரிகின்ற குளிர்ந்த மலர்களை யணிந்த கூந்தலை உடையவர்களான நிலவுலகத்துப் பெண்கள் படிகக்கற்களாலாகிய பால்போன்ற நிலா முற்றத்திலே தூய்மையான நிலவொளியை ஒத்த முத்துப் பந்தலில் கண்ணிமைகள் ஆடாமல் வானுலகத்துப் பெண்களோடு அம்மானை ஆட ஐயப்பாட்டுக்கு இடம் நுண்ணிய இடையின் அளவில் மாத்திரமே உள்ளதன்றென்று கருதித் தேவர்களும் மருளும்படியான தெளிந்த தமிழ் வழங்குகின்ற கூடற் பதியிலே எழுந்தருளியுள்ள வலிமையுடைய பாம்புகளை மாலையாகக்கொண்ட சடையை உடைய சொக்கேசப் பெருமானே பேரொலி எழுப்பும் கடல்நீரால் சூழப்பெற்ற பூமி முழுவதையும் ஒருங்கே பெற்றவளாகிய உமாதேவி தடாதகைப் பிராட்டியென்று ஒரு திருப்பேரைத் தரிக்கும்படி வந்து தோன்றியதும், ஒப்பற்ற முதற் கடவுளாகிய நீ சவுந்தர பாண்டியஞக ஆனதும் முருகக் கடவுள் உக்கிரகுமார பாண்டி

யன் என்ற பெயரைக் கொண்டு வந்து தோன்றியதும், இனிய தமிழ் மொழியின் சுவையை முழுதும் நுகருவதற்கு உண்டான விருப்பத்தினுலே ஆகும் என்ருல் தெளிந்த இத்தமிழினது பெருமையை எவர் அறிந்து சொல்லவல்லவர்?

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந்
தளித்தீ ரொருவற் கதுநிற்கத்
தொடுக்குங் கணேவே டனக்குலவாத்
தூணி கொடுத்தீர் போலுமா
லெடுக்குங் கணேயைந் தெய்தகணே
யெண்ணத் தொலேயா தென்செய்கேன்
திடுக்கங் கொளமால் சிலேமதனேச்
சினத்தீர் கடம்ப வனத்தீரே. 94

திருமால் மகனிழப்புத் துன்பத்தால் வருத்தத்தை அடையும்படி கரும்பு வில்லே உடைய மன்மதனேக் கோபித்து எரித்தருளியவராகிய கடம்பவனப் பெருமானே! நீர் ஓரடியவருக்கு அந்தநாளில் நெருங்கியிருந்து குறைதல் இல்லாத நெற் கோட்டையைக் கொண்டு வந்து கொடுத்தீர். அது இருக்க இப்பொழுது தொடுக்கின்ற அம்புகளே உடைய மன்மதனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத அம்பருத்தூணியைக் கொடுத்தீர் போலும். மன்மதன் எடுக்கும் அம்புகள் ஐந்தென்று சொல்லுவார்கள். அவன் என்மேல் எய்த அம்புகளோ எண்ணத் தொலேயாதன. நான் என்ன செய்வேன்?

கடமுடையு நறுநெய்க்குண் முழுகியெழு வதையொத்த
கரடமத கரிபெற்ரெ‌ுர் பிடியேபோன்
மடவநடை பயில்பச்சை மயிலேயொரு புறம்வைத்த
மதுரையழ கியசொக்கர் வரைவேலோய்
நடையுமெழு துவைநிற்கு நிலேயுமெழு துவைசொற்கு
ணலமுமெழு துவைசித்ர ரதிபோல்வா
ளிடையுமெழு துவைமுற்று மிலதொர்பொரு ளேயுமொக்க
வெழுதிலெவ ருணேயொத்த பெயர்தாமே, 95

குடமுடைந்து வழிகின்ற நல்ல நெய்யிலே முழுகி எழு வதைப் போன்ற கன்னங்களிலிருந்து ஒழுகுகிற மதநீரை உடைய ஆனைமுகத்து விநாயகப் பெருமானைப் பெற்று, ஒரு பெண்யானையைப் போல நடைபழகுகின்ற பச்சைமயிலை ஒத்த உமாதேவியாரை ஒரு பாகத்திலே வைத்துள்ள, மதுரையில் வீற்றிருக்கும் அழகிய சொக்கேசரது மலையிலே உள்ள வேலை உடைய தலைவனே! அழகிய ரதிபோன்ற தலைவியினது நடை யையும் எழுதுவையோ? அவள் நிற்கும் பலவகை நிலைகளையும் எழுதுவையோ? அவளது சொல்லிலே உள்ள இனிமையையும் எழுதுவையோ? அவளது இடையையும் எழுதுவையோ? முழு வதும் இல்லாத ஒருபொருளைப் பொருந்தும்படி எழுதினால் உன்னைப் போன்றவர் வேறு எவர் இருப்பர்?

———

(தொடரும்)

இன்ப வாழ்வு!

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள்,
பெண்ணாடம்.

ஒரு பெரிய அரண்மனை; மாற்றாரைச் செறுதல் தொழிலில் உயர்ந்த வேலிலங்கும் நிறைந்த பதாகையாற் பொலிந்த புரிசைகள் சுற்றிலும் உள்ளன; அதற்குரியோன், அரசர் பலர்க்கும் அரிமான் போன்றவன்; பனிமலர்ப் பைந்தாரான்; எரிசின வேல்தானையான்; அவன், அந்தணர்க்குப் புகழ்மாலை; அன்ன நடையினார்க்கு ஆரமுதம்; துன்னும் பரிசிலர்க்குக் கைம்மாறு கருதா வானம்!

ஓர்நாள் பரிசில் பெறுவான் வேண்டி, ஓர் இரவலன் அரண்மனை வாயிலை வந்தடைந்தான்; அரசன் வழிபடும் இறைவனைத் தானும் வழிபட்டுத் தன் குறை கூற அமயம் பார்த்து நின்றான்! அரசனும் மகிழ்வுடன் வரவேற்றான்! உடனே ஆண்டு நின்ற எத்தன்மைத்தோரும் அறியும்வண்ணம், "அரசே! முல்லைக்குப் பொற்றேரைப் பாரி ஈந்தான்! மயிலுக்குப் போர்வையை பேகன் ஈந்தான் எல்லையில் ஞாலத்து இசைவிளங்க, இரவாமல் ஈந்த இவ்விறைவர்போல, நீயும் கரவாமல் வழங்குவாய்!" என்றான்.

அரசன், மனமுவந்து வேண்டுவன யாவும் வெறுப்ப அளித்தான்; வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண் தேர் நல்கினான்; சின்னாள் சென்று, விடைபெற விரும்பினான் இரவலன்; மன்னனோ, "இன்னுங் கொள்க" எனப்படை நவின்ற பல்களிறும், பண்ணமைந்த தேரும், நடைநவின்ற பாய்மாவும் உளமகிழ ஈந்து, முன்வந்த பிறமன்னர் முடிவணங்கும் சேவடியால் நடந்து, அவ்விரவலன் பின்வந்து, இனிமை மிக விடைகொடுத்தனுப்பினான்.

பரிசில்களுடன் திரும்பிய இரவலன், மிகவும் உயர்ந்த மலைவழியினிடத்துப் பாணன் ஒருவனைக் கண்டான். தூய அன்புடன் அவனை நோக்கி, "இன்றொடை நல்லிசை - யாழ்ப் பாணு! நீயும், எம்மைப்போல இக்கன்றுடை வேழத்தக் கான் கடந்து, அரண்மனை வாயிலடைந்தால், உறுதியாக வாவியிற் பூவாதப் பொற்றாமரைப்பூவைத் தலையிலே சூட்டப் பெறுவாய்" என்று கூறினான். இன்னும், இது போன்றே, தன்வழியில் எதிர்ப்பட்ட கூத்தர், விறலியர், பொருநர், புலவர் யாவரையும் அவ்வரசன்பால் அன்புடன் ஆற்றுப்படுத்தினான்.

இப்படி ஆற்றுப்படுத்தப்பட்ட அறிவன் ஒருவன், ஆவல் மீதூர அரண்மனையை நெருங்கினான். அதுசமயம், அரசவையில், கூத்தரும், விறலியரும் ஆடல்பாடல்களுடன் இன்னிசை விருந்து செய்து கொண்டிருந்தனர். இருப்பினும், அரசன், வழக்கம்போலவே முகமலர்ந்து அன்புடன் வரவேற்றான். வேந்தன் முன்னே நின்று, அப்புலமை மிக்கோன், "நான்கினால் மட்டும் வென்று களங்கொண்ட வேல் வேந்தனே! நீ, இனி மேல் ஒன்றிலேயே இரண்டையுமே கண்டறிதல் வேண்டும்; மூன்றையுமே அடக்கி, ஐந்தையும் வெல்லல் வேண்டும்; ஆறினையும் அகற்றல் வேண்டும்; ஏழினையும் முற்றக் கடிதல் வேண்டும்; இதுதான், உண்மையான இன்ப வாழ்வுக்கு வழி" என்று அறைந்தான்.

இதைக் கேட்ட, கருங்குழல், வெண்குடைக் காவலன், யாதும் அறிய முடியாமல் கவன்று, "புலவரேறே! நும் அறிவுரைகள் எனக்குப் புரியவில்லையே! இதுகாறும் இதுபோன்ற நுண்ணறிவுடன் பேசிய அறிஞரைக் கண்டேன் இல்லை; அடியேன் அறியாமை நீங்கத் தெளிவுபடக்கூறி அருள்புரியும்" என்று மன்றாடினான்.

உடனே அப்புலவன், புன்முறுவல் பூத்து, "அரசனே! நீ, நான்கினால் களங்கொண்டாய் என்பதற்கு, யானை, தேர், குதிரை, காலாள் இப்படைகளாலே பூசலை வென்று போர்க்களம் கைக்கொண்டாய் என்று பொருள்; ஒன்றிலே இரண்டைக் கண்டறி என்பதற்கு, உன் ஆன்மாவிலே புண்ணியம், பாவம் இரண்டையுமே பகுத்துணர்வாய் என்று பொருள்; மூன்றையும்

அடக்கு என்பதற்குக், காமம், வெகுளி, மயக்கம் இம்முன்றையும் அடக்குவாய் என்று பொருள்; ஐந்தையும் வென்று என்பதற்கு ஐம்பொறிகளையும் ஆமைபோல் அடக்கி உன் வசப்படுத்துக என்று பொருள்; ஆறினையும் அகற்றலாவது, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று சொல்லப்பட்ட இவ்வாறும் மேலும், மேலும் பெருக வழிகோலுவாய் என்று பொருள்; ஏழினையும் கடிதலாவது, வேட்டல், கடுஞ்சொல் தண்டம், சூது, பொருள் ஈட்டம், கள், காமம் என்ற இவ்வேழினையும் முற்றிலும் விலக்கி வாழ்வாய் என் று பொருள்; இதைத்தான், யான் உனக்குக் குறிப்பு மொழியால் கூறினேன்; இப்போது விளக்கமாக உரைத்தது உன் நன்மைக்கே'' என்று மொழிந்தான்.

அரசன், பேருவகையடைந்து, அப்புலவனைப் பலபடியாகப் பாராட்டி, நிரம்ப வெகுமதிகள் ஈந்து வழியனுப்பினுன். பின்னர், அப்புலவன் கூறியாங்கு, வாழ்ந்து, வானுலகம் ஆளும் சிறப்பு எய்தினுன்.

இந்தச் சுவைபடும் நிகழ்ச்சி, புறப்பொருள் வெண்பாமாலை என்ற இன்பத் தமிழ் நூலில் பாடாண் படலம் என்ற பகுதிக்கண் காணப்படும் சில துறைகளைக் கொண்டு, கற்பனையாக வடித்தெடுக்கப்பட்டது. மூலகாரணமாயுள்ள ஓம்படை என்ற துறையை ஈண்டுத் தருகிறேன்; படித்தறிந்து இன்புறுங்கள். ஓம்படை என்பது, "இன்ன காரியத்தைச் செய்யுமது தன்மை, யெனச் சொல்லி, வேந்தன் முன்னே நின்று புலமை மிக்கவன் அடுத்துச் சொல்லியது'' என்று உரையாசிரியர் கூறுகிறுர். இதோ அந்தத் துறை!

ஓம்படை (கொளு)

இன்னது செய்த லியல்பென விறைவன்
முன்னின் றறிவன் மொழிதொடர்ந் தன்று:

"ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினுல்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே—சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்து ளைந்துவென் றுறகற்றி
ஏழ்கடிந் தின்புற் றிரு.''

எல்லோருடைய இன்ப வாழ்வுக்கும் இவ்வெண்பா, வழிகோலும் என நம்புகிறேன்!

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

★

[புதிய மலிவுப் பதிப்பு — 1961]

புதிய பதிப்பு பிரதி ஒன்றின் விலை ரு. 3–50 ந. பை. ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(முந்தின பதிப்பு பிரதி ஒன்றின் விலை. ரு. 6/–)

(தபால் கட்டணம் வேறு)

768 பக்கங்கள் கொண்டது. (128 + 621 + 19) உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி, முதலியவற்றுடன் கூடியது.

ஒரே சமயத்தில் 5 பிரதிகளும் அதற்குமேலும் வாங்குபவர்களுக்கும் 20% கழிவு உண்டு.

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தைச் சாரும்.

கிடைக்குமிடம்:–

ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர்
ஸ்ரீவைகுண்டம் P. O. :: (திருநெல்வேலி மாவட்டம்)

அம்மையப்பர்

திரு. க. சுப்பிரமணியன் அவர்கள்,
ஆத்தூர்.

வழிபாட்டில் சிறந்தது அம்மையப்பர் வழிபாடு. இறைவனை அம்மையும் அப்பனுமாய் நினைந்து வணங்குவதின் உட்பொருளைச் சிந்திக்க வேண்டும். சக்தியின்றி ஓர் உயிர்ப் பொருளும் இயங்குவதில்லை. மனிதன் உட்பட எல்லா உயிர்களும் தம்முடைய செய் தொழில்களை நாடொறும் செய்து வர வலிமை இனறி யமையாது வேண்டப்படுகிறது. வலிமை யற்றவன் வாழ்வு அற்றவன். உடல்வலிமையின் துணைகொண்டு மனிதன் பல இடங்கட்கும் சென்று பொருள் ஈட்டும் முயற்சியில் ஈடுபடுகிறான். வலிமையில்லாதவர்கள் தாம் வாழப் பிறர் உதவியை எதிர்பார்க்க வேண்டியநிலை ஏற்படுகிறது. எனவே, வலிமையின் அடிப்படையில் எழுப்பப்படுவதுதான் வாழ்வின் வெற்றிக்கு அடிகோலும் தன்னம்பிக்கையும், தளரா ஊக்கமும்.

இறைவன் ஐந்தொழில் புரிந்து வருகிறார். இளைப்பின்றி இடையறாது செய்து வருகிறார். உலகில் இரவும் பகலும் தொழில் புரியும் ஏழை பங்காளன் இறைவன் ஒருவரே! பிறர் நலத்தின் பொருட்டுச் செய்துவரும் இச்செயலைப் பயன் கருதாப்பணிக்கு (நிட்காமியப்பணி) ஒப்பிட்டு இறைவனைத் 'தியாகப் பொருப்பு' என்பார் அருணகிரியார்.

'தியாகப் பொருப்பைத் த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல்யாணிதன் பாலகனே'

என்பது கந்தரலங்காரம்.

ஆக்கல் (சிருஷ்டி), அளித்தல் (திதி), அழித்தல் (ஸம்ஹாரம்) மறைத்தல் (திரோபவம்) அருளல் (அனுக்ரகம்) என்னும் ஐந்தொழில்களும் இறைவனுக்கு மிகவும் எளிமையான

வேலையாகும். அவர் அதை ஓர் பொழுது போக்கு விளையாட்டாகவே செய்து வருகிறார். எத்தொழிலையும் எளிமையாகச் செய்து முடிப்பவர் இறைவன் என்பது அவருடைய சர்வவல்லமையைக் காட்டுகிறது.

“ உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே ”

என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பர் வாக்கு.

இறைவனுடைய வலிமையை சக்தியைத்தான் அம்மையாக வைத்து வழிபடுகின்றோம். இறைவனிடமிருந்து அவனுடைய சக்தியைப் பிரிக்கமுடியாது. நாம் வேறு நம்முடைய சக்தி வேறு அல்ல. ஆண்டவனும் அவனுடைய சக்தியும் இணைந்திருக்கும் கோலத்தைத்தான் அம்மையப்பர் என்று அழைக்கிறோம். அதுவே நாம் வணங்கும் அர்த்த நாரீசுரர் திருக்கோலம். ஆதியந்தமில்லா இறைவன் தனது அருட்சக்தியின் மூலம் உலக உயிர்களை இயக்கி வருகின்றார். கோடான கோடிப் புவனங்களையும் ஆட்டுவிக்கும் பரம்பொருளின் அருட்சக்தியையே பெண்வடிவாய் வழிபடுகின்றோம். “திருந்தப்புவனங், கள் ஈன்ற பொற்பாவை” என ஆண்டவனுடைய சக்தியை நோக்கிப் பாடுகிறார் அருணகிரியார்.

அருட்தாகமும், ஆன்மீகப்பசியும் கொண்ட மணிவாசகப் பெருமான் இறைவனை நோக்கி, ‘அம்மையே! அப்பா!’ என்று அழைக்கும் அவ்வார்வச் சொல்லின் அழகுதான் என்னே! சிவமின்றிச் சக்தியும், சக்தியின்றிச் சிவமும் இயங்க முடியாது என்பதும், பெருமான் யாண்டும் சிவசக்தி சொரூபராய் நின்று ஆன்மாக்களுக்கு அருள்புரிந்து ஐந்தொழில் இயற்றிவருகின்றார் என்பதும்,

“ அருளது சக்தியாகும் அரன்தனக்கு அருளையின்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை ”

என்னும் சிவஞான சித்தியாராலும்,

...........“ நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் ”

என்னும் திருவாசகத்தாலும் அறியலாம்.

உற்றார்களாகவும், பெற்றோர்களாகவும் நம்மோடு தொடர்பு கொண்டு அன்புசெலுத்துபவர்கள் உண்மையில் நமக்கு உற்ற துணைவர்கள் அல்லர்; என்றும் நமக்குத் துணையாய் இருப்பவரும், தாயும் தந்தையுமாய் வீற்றிருந்து நம்மைக் காப்பவருமாகிய இறைவன் ஒருவரே நமக்குத் துணையும் சுற்றமுமாம்.

“ உற்றார் யாருளரோ உயிர் கொண்டுபோம் பொழுது
குற்றாலத் துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் யாருளரோ ”

என்பது தேவாரம்.

பெண்மையை இகழாது போற்றும் நன்னெறி நம் சமய நெறி. இறைவன் ஆன்மாக்கள் மீது செலுத்தும் அன்பு, குழந்தை அழுமுன் அதனுடைய பசியை அறிந்து பாலூட்டும் தாயின் அன்பைக் காட்டிலும் சிறந்தது எனத் தாய்மையின் அன்பையும், அதையும் வென்ற பேரன்பையும் இறைவனிடம் காணுகிறார் மாணிக்க வாசகப்பெருமான். இறைவனுடைய சக்தி அன்பின் வடிவம். ஆறு நாட்களில் அருந்தொண்டுசெய்து தனது அருமைக் கண்களைப் பிடுங்கிக் காளத்தியப்பருக்கு அப்பிய கருணை வள்ளல் கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரின் அன்பிற்கு ஆண்டவன் அடிமையாகவில்லையா? அன்பிற்கு அடிமையாகும் ஆண்டவனுடைய சக்தியின் பெருமையை என்னென்பது!

அன்பர்களின் அன்பிற்கு இரங்கி அருள்புரியும் இறைவனின் அன்புப் பெருக்கால் அடியவர்களைத் தம்பால் அணைத்துக் கொள்ளும் பெருமானின், சக்தியைப் பெண்வடிவமாய் நினைந்து வழிபடுவது நம்சமயம் கண்ட உண்மையும், முடிபுமாகும்.

கருத்தில் இருத்துமின் பருத்தியின் பாடம்!

புலவர், பனசை,
திரு. சு. சடையப்பன் அவர்கள்,
தமிழாசிரியர், கழக ஆண்கள் உயர்நிலைப்பள்ளி,
பெருந்துறை, (வழி) ஈரோடு.

கார்முகில் குளிர்ந்து கண்ணீர் சிந்த
ஏரால் உழவர் எங்கும் கீறினர்;
எருவும் இட்டனர்; எல்லாஞ் செய்தனர்;
பருவம் தப்புமுன் பாங்குடன் விதையை
வித்தினர்; என்னுடன் வளர்ந்த களையைக்
கொத்தினர்; பின்னர் குளிர்நீர் பாய்ச்சினர்;
நாளும் பொழுதும் நடந்து சென்றன;
நாளும் என்னை நன்கு போற்றிக்
காவா நின்றனர்; கண்கவர் மஞ்சள்
பூவாய்ப் பூத்தேன்; பொன்னிற வண்டு
மட்டில் சுவைகொள் மட்டைக் கண்டு
எட்டிப் பறந்து எல்லாம் உண்டு
இன்பங் கொண்டு ஏகுவ துண்டு;
என்பால் இறைவன் ஏற்றிய மதுவால்
வருகை தந்த வண்டால் யானும்
கருவைப் பெற்றேன்; களிப்பை யுற்றேன்;
கொஞ்ச நாளில் கொஞ்சுங் குழந்தை
பிஞ்சாய் வந்து பொலியக் கண்டேன்;
காலஞ் செல்லக் காயாய் முற்றித்
தோல்மேல் காய்ந்து தொடர்பு நீங்க
உள்ளே என்றன் உண்மை வண்ணம்
வெள்ளை கண்டேன்; வியப்புக் கொண்டேன்;
கூடை பைகள் கொண்டவ ராகி
ஆடவர் பெண்டிர் அருகில் வந்தனர்;
பைய வந்தென் பக்கஞ் சேர்ந்து

நைய என்மெய் நல்கிய காயைக்
கையாற் பறித்துக் கைதி யாக்கினர்;
ஐயோ என்னை ஆக்கிய ஐயர்
கொண்டு சென்று கூறினர் விலையை;
கண்டவ னொருவன் காசு கொடுத்துக்
கொண்டன னென்னைக் கோணிப் பையில்
மண்டிடச் செறித்து மாநகர் ஏகினன்;
ஆலைக் காரர் அள்ளிப் பார்த்துக்
கோலால் நிறுத்துக் கொண்டுள் சென்று
பொறியொன் றன்மேல் போட்டனர் என்னை;
சிறிது போழ்தில் சென்றேன் வேறாய்;
வெண்மஞ் சொப்ப வேறுபா டுற்றேன்;
கொண்டன ரென்னைக் கொட்டை போக்கினர்;
மஞ்சுறழ் என்னை மற்றோர் பொறியில்
வஞ்சகர் வைத்து வடிவம் மாற்றினர்;
கொஞ்ச மல்ல கொடுமை அறைத்து
அஞ்சும் வகையில் அல்லற் படுத்தி
விஞ்ச முறுக்கினர் வீணர்; யானோ
கெஞ்சிப் பார்த்தேன் கேட்க வில்லை!
கஞ்சி கொட்டிக் காய வைத்து
எஞ்சாத் துன்பம் எல்லாஞ் செய்தனர்;
பஞ்செனப் பகர்ந்த பாரோர், இழையென
நெஞ்சில் நினைத்து நேரில் அழைத்தனர்;
நீண்டேன் இதனால் நீண்டே மெலிந்தேன்;
பூண்டேன் பொறுமை; பூரித் தென்னைக்
கண்ணைக் கொண்டு கண்டனர் நன்கு
எண்ணைக் குறித்து என்தரங் கூறினர்;
வண்ணஞ் சேர்த்து வனப்புற வாக்கி
எண்ணம் போல என்னை எடுத்துப்
பொறியாம் தறியில் போட்டனர்; யானும்
'அறுவை' யானேன் அழகைப் பெற்றேன்;
இன்னா செயினும் இனிய செய்கெனும்
முன்னோன் மொழியை முழுதா யெண்ணித்
துன்பம் எனக்குத் தோற்றிய வர்க்கும்

இன்பம் தந்து இழிவைப் போக்கிக்
கோடை வாடைக் கொடுமை தீர
ஆடை யாக ஆகிட லானேன்;
மானத் துடன்நீர் மாண்புடன் வாழத்
தானம் என்னைத் தந்தேன் மக்காள்!
தின்னும் உணவைத் தவிர்த்திருந் தாலும்
என்னைத் தவிர்த்து இருத்தல் சாலா;
பொன்னை மண்ணைப் பெண்ணைத் துறப்போர்
என்னைத் துறத்தல் எளிதோ? சொல்வீர்!
சொல்லிய கதையைச் சுவைத்தீர்!
ஒல்லும் வகையில் உதவுமின் பிறர்க்கே!

காளிதாசனின் கவி நலம்

இளஞ் சைவப் புலவர்
திரு. பி. என். பாலசுப்பிரமணியன் அவர்கள்,
Dip. Re. Ed.,
சைதாப்பேட்டை, சென்னை.

உள்ளத்தினின்றும் வெளித்தோன்றும் உணர்ச்சிகள் நிறைந்த கவிதையே, உயர்ந்த கவிதையென பாரதி உரைக்கின்றார். உள்ளத்தின் உணர்ச்சிகளோடன்றி, பற்பல அணிகளும் காளிதாசனது காவியங்களில் கவினுற அமைந்துள்ளமை கண்டு உண்மையிலேயே நாம் உள்ளம் பூரிக்கிறோம்.

தண்டிந: பதலாலித்யம் பாரவேரர்த்த கௌரவம்
உபமா காளிதாசஸ்ய மாகே ஸந்திசத்ரயோகுண||

'காளிதாசனது காவிய நலம், உவமை அணியால்' சிறப்பிக்கப்படுவதாக மேற்போந்த வடமொழிச் செய்யுள் மொழிகின்றது. 'காளிதாசன், உவமையின் அவதாரம்' (Kalidasa is an embodiment of simile) என்ற ஆங்கிலக் கூற்றும் ஈண்டு ஒப்புநோக்கற் பாலதே.

வால்மீகியினது வழியைப் பின்பற்றி, உவமைகளை உரைப்பினும், தளிர்நடை போட்டு, படிப்போரைப் பரவசப்படுத்தும் பாங்குடன் அமைந்துள்ள காவியங்களின் நலனை நாம் புகழாது வாளாவிருக்க எங்ஙனம் இயலும்?

'காளிதாசன், பார் அமுதருந்தப் பஞ்சதாரையாய்ச் செய்தான்' என்ற தமிழ்ப் பாடலின் பகுதியும், காளிதாசனது கவித்துவத்தைச் சொல்லாமல் சொல்லுகின்றது.

நிர்கதாஸு நவா கஸ்ய காளிதாசஸ்ய ஸூக்திஷு
ப்ரீதிர் மதுரஸார்த்ராஸு மஞ்சரீஷ்விவ ஜாயதே||

'ருசிமிக்க தேனைச் சுவைத்தால் உண்டாகும் இன்பம் காளிதாசனது உத்திகளில் அமைந்துளது' என்னும் இப்பாடலின் கூற்று, கவிஞனின் கவித்துவத்தைச் செம்மைப்படுத்துகின்றன.

புரா கவீநாம் கணநாப்ரஸங்கே கநிஷ்டிகாதிஷ்டித காளிதாசா|
அத்யாபி தத்துல்ய கவேரபாவாதநாமிகா சார்த்தகநாமதோ||

'முன்னர் கவிகளைக் கணக்கிடும் போது காளிதாசனையே முதலில் கணக்கிட்டனர். இன்றளவும் அவனுக்குச் சமமான கவிஞன் தோன்றவில்லை' என்ற இக்கூற்றைக் கண்ணுறும் நமதுள்ளம் உவப்பிலாழ்கிறது.

கவிஞன் அவையடக்கம் அமையப் பெற்றிருத்தல் அவசியம். தானென்னும் செருக்கற்றுத் தகைமையுடன் வாழ்ந்து மக்களைத்தன் பாக்களால் பரவசப்படச் செய்பவனுக்கு அடக்கம் அவசியம் தேவை. உயர்தரக் கவிஞனும் இக்கட்டளையைச் சிரமேற்கொள்ளுகிறான்.

வடமொழி ஐம்பெருங் காப்பியங்களுள் இரண்டினை இயற்றிய பெருமையை உடையவன் காளிதாசன். அவற்றுள் ஒன்றாகிய ரகுவம்சத்தில் அவையடக்கம் கூறுங்கால், 'சூரிய வம்சத்தின் கதையைச் செய்வதற்கு நான் தகுதியுடையவனல்லன், கடக்க முடியாத கடலெங்கே? என் சிற்றறிவு எங்கே?' என்றியம்பி எல்லோரையும் தனது அவையடக்கத்தால் ஆனந்தப் படுத்துகிறான்.

மந்த: கவியச: ப்ரார்த்தீ கமிஷ்யாம்யுபஹாஸ்யதாம்|
ப்ராம்சுலப்யே பலே லோபாத் உத்பாஹுரிவ வாமந:||

'குறைந்த அறிவுடையவனும், கவியின் புகழை விரும்புகின்றவனுமான நான், உயரமான மனிதனால் அடையத் தகுந்த பழத்தின் ஆசையினால் உயர்த்திய கையையுடைய குள்ளன் போல் பரிகசிக்கப்படும் நிலையை அடைவேன்' என்ற வரிகளைக் கண்ணுறும் நாம், நம்நிலைமறந்து கவிஞனின் உயர்வைப் போற்றுகின்றோம்.

தனது நூலின் முதலில், கவிஞன் தனது வழிபடு கடவுளை யாவது, ஏற்புடைக் கடவுளையாவது வணங்குவது வழக்கம். இத்தகு நெறிகளினின்றும் சிறிதும் பிறழாது, தனது காவியங் களின் முதலில், 'எல்லாம் வல்ல' இறைவனும் சிவனைத் துதிக்கிருன்.

சாகுந்தல நாடகத்தின் தொடக்கத்தில், இறைவனின் எண்குணங்களை இயம்பி, 'அவனருளாலே அவன்ருள் வணங்கி' நாம் உய்ய வழிவகுக்கிருன், இதனுல் காளிதாசனைச் சைவனுகக் கருதவியலாது. எல்லாக் கடவுள்களையும் ஏத்துகின்ற காரணத் தால், ஒருமதத்தைச் சேர்ந்தவனுகக் கருதமுடியாது.

உள்ளதை மறைக்காது, மறக்காது மொழிகின்ற (Realistic) உத்தமக்கவிஞன் காளிதாசன். உணர்ச்சிகளை மிருதுவான எளிய நடையில் இயம்பும் வன்மை காளிதாசனில் காணப்படுகின்றது. வெவ்வேறு மனித உணர்ச்சிகளையும் உயரிய முறையில் உரைப்பது எல்லோரையும் மகிழ்விக்கின்றது. 'உணர்ச்சிகளை உரைப்பதில் மென்மையும், கற்பனைக் கருவூலங் களின் சிறப்பும், எந்நாட்டுக் கவிஞனையும் விஞ்சக்கூடிய சிறப்பைக் காளிதாசனுக்கு அளித்துள்ளன'.* என்று ஆங்கில அறிஞர்கள் அறையும் அளவிற்கு அவர்தம் கவித்துவம் அமைந்துள்ளது.

'அர்த்தாந்த ரந்யாஸம்' எனப்படும் வேற்றுப் பொருள் வைப்பு அணியை அங்கங்கே அழகாக அமைத்து அனைவரை யும் ஆட்கொள்ளுவது காளிதாசனது கவி நலத்திற்கு மேலும் சிறப்பளிக்கின்றது.

'ஸூர்யாபாயே நகலு கமலம் புஷ்யதி ஸ்வாமபிக்யாம்|'

'சூரியனது ஒளியின்றேல் தாமரை தனது உரிய மலர்ச்சி யுடனிலங்காது' என்ற உண்மை அனைவரும் அறிந்ததே. தனது மறைவால் தனது இல்லம் களையிழந்து காணப்படும் என்றி

---

* 'Tenderness in the expression of feelings and richness of creative fancy have assigned to him his lofty place among the poets of all nations' (Alexander Von Humboldt.)

யம்பி அதற்கு உவமையாக 'மேகசந்தேசம்' என்னும் காவியத்தின் தலைவனுனயக்ஷன், மேகத்திடம் இயம்புவதாகக் கவி வர்ணிக்கின்ருர்.

பொருந்த உரைக்கும் உயர்ச்சிக்கு இஃதொன்றே சான்ரும். ஒருபானைக்கு ஒரு சோறுதானே பதம்?

தலைவனது பிரிவாற்ருமையால் தலைவி துயருற்றுத் துன்பப் படுகின்ருள். அவளைக்கண்டு ஆறுதல் கூறித் தனது அன்பை வெளிப்படுத்துமாறு யக்ஷன் மேகத்தைப் பணிக்கின்ருன். தனது துணைவியை அடையாளங்கண்டு கொள்ள அவளுருவை வருணிக்கின்ருன்.

தந்வீ ச்யாமா சிகரிதசநா பக்வபிம்பாதரோஷ்டீ
 மத்யே க்ஷாமா சகிதஹரிணீ ப்ரேக்ஷுணு நிம்நநாபி:|
ச்ரோணீ பாராதலஸ கமநா ஸ்தோக நம்ரா ஸ்தநாப்யாம்
 யாதத்ர ஸ்யாத் யுவதி விஷயே ஸ்ருஷ்டி ராத்யேவதாது:||

குழந்தைப்பேறு கிட்டாத இளநங்கையையும், பதினுறு அகவை நிரம்பிய பருவ மங்கையையும், அழகியையும், இனிய குரலுடையவளையும் ச்யாமா என்ற சொல் குறிக்கும். மெலிந்த இடையையும், இடையின் கனத்தால் தளர்ந்த நடையையும் பழுத்த கோவைப்பழத்தின் நிறத்தை யொத்த அதரங்களையும் உடையவளாம் யக்ஷனின் மனைவி. படைப்போனின் படைப் பிற்கோர் இலக்கியமாய் அமைந்துள்ளாளாம்.

இத்தகு இனிய வர்ணனைக்கும் ஒருபடி மேலே சென்று விட்டான் கவிஞன், 'சாகுந்தலம்' என்னும் நாடகத்தில். துஷ்யந்தன் சகுந்தலையின் அழகைக் கண்டு வியந்து கூறுவதாக வரும் காளிதாசரின் சுலோகத்தின் மொழிபெயர்ப்பைத் திரு. மறைமலையடிகள் பின்வருமாறு தருகின்ருர் அதன் அழகைக் காணுங்கள்!

"மோவா மலரோ நகங்களை யாத முழுமுறியோ
ஆவா கருவி துருவாது பெற்ற அருமணியோ
நாவாற் சுவையாப் புதுநறவோ செய்த நற்றவங்கள்
தாவா தோருங்கு திரண்டால் அன்ன தையலரே."

இதன்கண் துஷ்யந்தன், சகுந்தலையினது அழகை அனுபவிக்கும் போது, அவள்தன் இனிய இயற்கையழகை இயம்புகின்றான். இவ்விடத்திலும் கவிஞன் தனது கவித்துவத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போலவே இப்பாடல் அமைந்துள்ளது. இத்தகு வர்ணனைகள் இன்பம் பயப்பனவே யன்றோ.

தனது காதலைத் துஷ்யந்தனுக்குத் தெரிவிக்கும் பொருட்டுச் சகுந்தலை, தாமரை இலையில் தனது நகத்தால் ஒரு பாடலை எழுதுகிறாள்.

"இரக்கமிலா அரசே! நான் என்செய்வேன்? இரவுபகல்
எரிக்கின்றான் என்உடம்பை எழிற்காமன்! நின்மேலே
பெருக்கின்ற தென்காதல்! பேதையேன் நின்நெஞ்சம்
இருக்குமா றுணர்ந்திலேன் எனக்கதனை இயம்புதியோ?"

இப்பாடலினால் அவளது அன்பின் ஆழமும், துஷ்யந்தனை அவள் விரும்பியதும், அவனைக் கண்டது முதல் காமனது அம்புகளால் தாக்கப்பட்டு, அவனது ஆக்கிரமிப்பால் உண்டாகும் வெப்பத்தைத் தாள முடியாமலிருப்பதும், 'காதல் நிகழ்ச்சியின் கதையும் பலனும்' போல இவ் ஒரு பாடலிலேயே உணர்த்தப் பட்டிருப்பது நம்மையெல்லாம் வியப்பிலாழ்த்துகின்றது.

பரம்பொருளை உன்னுது உலக வாழ்க்கையில் உழல்கின்றது உயிர். பரம்பொருளுக்கும், உயிருக்கும் உள்ள உறவு, உயிர் உண்மைப் பொருளாம் பரம்பொருளையடைய ஆற்றும் முயற்சி ஆகிய அனைத்தும் 'மேகசந்தேசம்' என்னும் சிறு காவியத்தில் உணர்த்தப்படக் காண்கின்றோம். இங்ஙனம் வாழ்க்கை, இயற்கை என்பதோடன்றித் தத்துவத்தையும் காவிய வாயிலாக உணர்த்த முயல்வது உயரிய முயற்சி.

பூத்துக்குலுங்கும் காலங்களது வர்ணனைகள் 'ருதுசம்ஹாரம்' என்னும் காவியத்தில் சிறப்புற அமைந்திருக்கக் காணலாம்.

இதுபோன்ற இனிய எளிய முறைகளால் காவியங்களைப் படைத்திருப்பதால்தான், காளிதாசன் மகாகவி எனப் போற்றப் படுகின்றான் என்பது வெள்ளிடைமலை!

திரு அவளிவணல்லூர்

சைவமாமணி, வித்துவான்,

திரு. பொன். முருகையன் அவர்கள்

தலைமைத் தமிழாசிரியர்,

ஸ்ரீகயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

உயர்நிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

சிவத்தலங்கள் மிக்கிருப்பது சோழநாடு. அத்தகைய நாட்டில் காவிரியின் இருமருங்கிலும் சிறந்த தலங்கள் அணி பெற அமைந்துள்ளன. அவற்றுள் தஞ்சை மாவட்டம் சாலிய மங்கலம் புகைவண்டி நிலையத்திற்கு ஆறரைமைல் வடகிழக்கி லும், கோயில் வெண்ணி புகைவண்டி நிலையத்தருகிலும் அமைந்த தலம் திருஅவளிவணல்லூர்.

பெயர்க் காரணம்: திரு+அவள்+இவள்+நல்லூர் = திரு அவளிவணல்லூர். சிவபெருமானுல் அவள், இவள் என்று சுட்டிக் காட்டப் பெற்றமையால் இப்பெயர் பெற்றது.

வரலாறு: பழங்காலத்தே இப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பூசித்த ஆதிசைவர் ஒருவர்க்கு இரண்டு பெண் கள் இருந்தனர். அவர்களில் மூத்த பெண்ணை மணந்தவர் காசி யாத்திரைக்குச் சென்றிருந்தனர். சென்றபின் அம்மூத்த பெண் அம்மைவார்க்கப் பெற்று, உருவின் நிறம் மாறிக் கண் இழந் திருந்தனர். தந்தையார் இளைய பெண்ணை வேறு ஒருவர்க்கு மணம் செய்து கொடுத்திருந்தனர். சில ஆண்டுகளுக்குப் பின்னர் காசியாத்திரை சென்றவர் திரும்பி வந்தார். அந்தச் சமயம் இளைய பெண்ணும் கணவன் வீட்டிலிருந்து வந்திருந் தாள். காசியிலிருந்து திரும்பி வந்த மூத்த மாப்பிள்ளை இளைய பெண்ணைத் தன்னுடைய மனைவி என்று தவறுதலாகக் கருதி,

மூத்தவளின் நிறவேறு பாட்டைக் கண்டு 'இளையவளே தம் மனைவி, மூத்தவளைத் தம் மனைவி என்று சொல்லி ஆதிசைவர் ஏமாற்றுகின்றார்' எனக் கூறி வழக்கிட்டனர்.

இறைவன் இடப வாகனத்தில் எழுந்தருளி மூத்த மகளே இவரது மனைவி என்னும் பொருளில் 'அவள் இவள்' என்று சுட்டிக் காட்டிய காரணத்தால், நல்லூர் என்ற தொடரையும் சேர்த்து அவளிவணல்லூர் என்று பெயர் எய்திற்று. கர்ப்ப கிரகத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனது பின்பக்கத்தில் இவ்வரலாற்றை உணர்த்தும் பிரதிமங்கள் செதுக்கப் பெற்றிருக் கின்றன. காவிரித் தென்கரைத் தலங்களுள் 100வது எண்ணிக் கையினையுடையது இத்தலம்.

இறைவன் திருப்பெயர்: சாட்சி நாதர். ஆதிசைவர் பொருட்டு இறைவன் சாட்சி கூறியதால் பெற்ற பெயர். திரும்புறம்பயத் தில் எழுந்தருளிய பெருமானின் பெயரும் சாட்சிநாதர் என்பதே.

இறைவி: சௌந்தர்யவல்லி.

தீர்த்தம்: சந்திர புட்கரணம்.

தலமரம்: பாதிரி.

இவ்வூர் இறைவரின் பெயர் 'தம்பரிசுடையார்' என ஞான சம்பந்தர் தாம்பாடிய பாடலில் குறிப்பிடுகிறார்.

"தம்பரிசுடையார் என்னும் நாமமும்
நிகழ்ந்திட ஏத்தி"

என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

பரிசுத்தம்: இறைவரின் பெயர் தம்பரிசுடையார் என்ற வுடன் ஒரு செய்தி ஞாபகம் வருகிறது. சோழமன்னர் சில புலவர்களைக் கூப்பிட்டு, அவர்கள் சிலேடைத் திறமையை ஆராய வேண்டி 'தூய்மையுடைய விலங்கு எது? என்று வினு வினான். அதற்குத் தக்க விடையளிப்பவர் பரிசு பெறத் தகுதி யுடையவர் என்று கூறினான். எல்லோரும் சிந்திக்கத் தொடங் கினர், சிலேடை என்றால் ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள்

படச் சொல்லுதல். இத்திறமை எல்லோருக்கும் அமையாது இத் திறமையுடையோர் இவ்வுலகில் ஒரு சிலரே. இவரைப் போற்று வோர் சிலர். தூற்றுவோர் பலர்.

பெருங்கண்ணனுர் என்ற புலவர் அரசனை நோக்கி, 'பரிசுத்தம் உடையது' என்ருர்.

(பரி + சுத்தம் உடையது)

(பரிசு + தம்முடையது)

(பரிசுத்தம் + உடையது)

என மூன்று பொருள் அமையக் கூறினுர். சபையோர் மகிழ்ந் தனர். புலவர் பரிசு பெற்ருர். (பரி-குதிரை)

கல்வெட்டுகள் : கி. பி. 1246–1279-ல் சோழ மண்டலத்தை ஆண்ட மூன்ரும் இராசேந்திரனது 7,22 வது ஆண்டுக் காலத் துக் கல்வெட்டுக்கள் இத்தலத்தில் உள்ளன.

'தேவர்க்கு யாண்டு பத்தாவது' -எனவும்

'உடையார் தம் பரிசு' எனவும்

இரண்டு கல்வெட்டுக்கள் தொடங்குகின்றன.

விழாக்கள்: மார்கழித் திருநாள், சித்திரைத் திருநாள் இவைகள் இத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

எனவே இத்தகைய பெருமை வாய்ந்த தலத்தைச் சென்றே னும், நினைத்தேனும், திசைநோக்கியேனும் வழிபடுக.

சிவ சிவ சிவ சிவ சிவ

பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13, இதழ் 8-ன் தொடர்ச்சி]

தானப்பொருத்தம். 6

முன்னர் மொழிந்த வருணப் பொருத்தத்தின் கண் ஆய்ந்தெடுத்த எழுத்துக்களைக்கொண்டே தானப்பொருத்தம் அமைக்க வேண்டியிருத்தலான் ஆருவதாகத் தானப்பொருத்தம் சாற்றலுற்ரும்.

(ஐவகைத்தானம்)

குறிலைந் துடனெடில் கூட்டி நின்ற
ஐ ஔ இரண்டும் இ உ அடக்கிப்
பால குமார அரச முப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர்.

—பன்னிரு பாட்டியல்.

(இ-பொ) ஐந்து குற்றெழுத்துக்களுடனே, அவைகளின் இனமாகிய நெட்டெழுத்துக்களைச் சேர்த்து ஐகார ஔகாரங்களை முறையே இகர உகரத்துள் அடக்கிப் பாலன், குமாரன், அரசன், முப்பு, மரணம் என்று ஐவகைத் தானங்களைப் புலவர் வகுத்தனர்.

பாட்டியலார் ஐகார ஔகாரங்களை முறையே இகர உகரங்களுடன் சேர்த்ததென்னை? யெனின், இயம்புதும்.

இனமில்லாத ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்துதலான் அங்ஙனம் கூறினர் என அறிக.

நன்னூலாரும் அக்கருத்திற்கியைய நவின்றிலங்கும் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக. அஃது வருமாறு:—

ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே. —நன்னூல்.

நெட்டெழுத்துக்களை அவைகளின் இனமாகிய குற்றெழுத்துக்களுடனும், ஐகார ஔகாரங்களை முறையே இகர உகரங்களுடனும் சேர்க்கின் உயிர் என்றும், உயிர் மெய்யென்றும், மொழியாநின்ற எழுத்துக்கள் எல்லாம் ஐந்து கூருய் அடங்குமென அறிக.

மேற்கோள்:

குறிலைந்துந் தந்நெடில்கொண் டிஉஐ ஔசேர்ந்
தறிபால குதியா வைந்தும்—இறைவன்பேர்
முன்னெழுத்துப் பாலனில்வைத் தெண்ணிமுப் பேமரணம்
என்னுமிவை தீதென்றே எண். — வெண்பாப்பாட்டியல்.

(ஐவகைத் தானத்தின் மூவகைப்பலன்)

நட்பே உதாசீ னம்பகை என்னும்
ஒப்புடைக் குறிப்பின் ஒருமூன் ருகும். —பன்னிரு பாட்டியல்.

(இ-பொ) ஒப்புடைய புலவர்களின் கருத்துப்படி பாலன், குமாரன், அரசன், மூப்பு, மரணம் என்னும் ஐவகைத்தானங்கள் (நட்பு, உதாசினம் பகை,) என்னும் மூன்று வகையுள் அடங்குமென்ப.

மேற்கோள்:

முன்பிற் செய்யுள் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையும் கொளலே.

—அகத்தியர்பாட்டியல்.

(நட்புத் தானங்கள்)

பால குமார அரச வென்னும்
மூவகைத் தானமும் நட்பெனப் படுமே. —பன்னிருபாட்டியல்.

(இ-பொ) முன்னர்க்கூறிய ஐவகைத்தானங்களுள் பாலன், குமாரன், அரசன், என்னும் மூன்றுதானங்களும் நட்புத்தானங் கள் என்று நவிலப்படும்.

ஈண்டு இயம்பிய நட்புத்தானத்திற்குரிய எழுத்தையே (அடுத்துக் கூறப்புகும் புட்பொருத்தத்திற்கியைய) பாட்டுடைத் தலைவன் மீதுபாடும் பாமாலையின் முதற்சீரின் முன்னெழுத் தாக அமைத்தல் வேண்டும்.

அங்ஙனம் அமைக்கும் பாமாலையான் பாட்டுடைத் தலைவ னுக்கு இன்பமும், எழிலும், இருநிதியும், புகழும் உண்டா மென்ப.

இங்ஙனம் பாட்டுடைத் தலைவனுக்கு எல்லாச் சிறப்புக் களும் உண்டாவதற்குப் பாலன், குமாரன், அரசன் என்னும் மூத்தானங்களுக்குரிய எழுத்துக்கள் காரணமாய் இருத்தலாற் ருன் அத்தானங்களை "நட்பெனப் படுமே" என்ருர்.

(உதாசீனம், பகை என்னும் தானங்கள்.)

ஒழிந்த இரண்டும் உதாசீ னம்பகை. பன்னிருபாட்டியல்.

(இ-பொ) மேற்கூறிய நட்புத்தானங்கள் நீங்க நின்ற இரு தானங்களுள் மூப்புத்தானம் உதாசீனமும், மரணதானம் பகையு மாகும்.

மூப்பு, மரணம் என்னும் இவ்விருதானங்களுக்குரிய எழுத் துக்களுள் ஒன்று பாமாலையின் முதன் மொழியின் முன்னெழுத் தாக நிற்கின் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமையே உண்டாகும். ஆகையான் இத்தானங்களுக்குரிய எழுத்துக்களை (பாமாலையின் முதற்சீரின் முன்னெழுத்தாக வாராது) நீக்குக.

மூப்பு - விருத்தம். கிழவன் ஒரு பொருட் சொற்கள்,

(தானம் அமைக்கும் விதம்)

பாட்டுடைத் தலைவன் இயற்பெயர் முன்னெழுத்துப்
பாலனாக நால்வகை எழுத்தும்
வட்டமாய் முறையின் இயலு மென்ப. — பன்னிருபாட்டியல்.

(இ-பொ) பாட்டுடைத் தலைவனது இயற்பெயரின் முதலெழுத்தைப் பாலதானமாக்க ஏனைய நான்கெழுத்துக்களும் முறையே வலமுற வட்டமாய்க் குமரன், அரசன், மூப்பு, மரணம் என்னும் நான்கு தானங்களாகப் பொருந்துமெனப் புகலுவர் புலவர்.

மேற்கோள்:

பெயர்முத லெழுத்துப் பால னாக
நால்வகை யெழுத்தும் வட்ட மாக
முறையே நட்புதா சீனம் பகைவரும். —கல்லாடனார்.

அகரவிளக்கம்

அரங்கன் என்ற பெயருக்கு முதலெழுத்து அகரம் ஆகையான் அகரமே பாலதானம்; இகரம் குமாரதானம், உகரம் அரசதானம்; எகரம் மூப்புத்தானம்; ஒகரம் மரண தானமாம்.

அகரத்தை முதலெழுத்தாக உடைய பேராளரைப் பாட விரும்பின் நட்புக்குரிய (பாலன், குமாரன், அரசன் என்னும் முத்தானங்களுக்குரிய) அகர இகர உகரங்களுள் ஒன்றைப் பாமாலையின் முதற்சீரின் முன்னெழுத்தாக அமைத்தல் வேண்டும்.

எகர ஒகரம் முதற்சீரின் முன்னெழுத்தாக வருதல் ஆகாவாம். என்னை? யெனின், எகரம் மூப்புத்தானமாகிய உதாசீனமாயும், ஒகரம் மரணதானமாகிய பகையாயும் இருத்தலான் என அறிக.

மேற்கோள்:

அகரந் தனக்காய நட்பென் றுரைப்ப
இகர உகரங்கள் தாம்.

அகரக் கெகரம் உதாசீன மாகும்
அகரக் கொகரம் பகை. —கல்லாடனுர்.

இகர விளக்கம்

இனியன் என்ற பெயருக்கு முதலெழுத்து இகரம் ஆகையான் இகரமே பாலதானம் உகரம் குமாரதானம் எகரம் அரசதானம்; ஒகரம் முப்புத்தானம். அகரம் மரணதானம் எனக் கொள்க.

முதன்மொழியின் முன்வைக்கத்தக்க எழுத்துக்கள் :

இ. உ. எ. என்னும் மூன்றுமாம்.

நீக்கத்தக்க எழுத்துக்கள் ஒ. அ. என்னும் இரண்டுமாம்.

மேற்கோள் :

உகரம் இகரம் எனவிரண்டும் என்ப
இகரந் தனக்காய நட்பு.

இகரக் கொகரம் உதாசீன மாகும்
இகரக் ககரம் பகை. கல்லாடனுர்

உகர விளக்கம்

உலகநாதன் என்னும் பெயருக்கு முதலெழுத்து உகரமாகையான் உகரமே பாலதானம்; எகரம் குமாரதானம், ஒகரம் அரசதானம்; அகரம் முப்புத்தானம்; இகரம் மரணதானமாம்.

முதன்மொழியின் முன்வைக்கத் தக்க எழுத்துக்கள் :

உ. எ. ஒ. என்னும் மூன்றுமாம்.

நீக்கத்தக்க எழுத்துக்கள் அ. இ. என்னும் இரண்டுமாம்.

மேற்கோள் :

உகர எழுத்துக்கு நட்பாய் வருமே
எகர ஒகரங்கள்தாம்.

உகரக் ககரம் உதாசீனம் என்ப
உகரக் கிகரம் பகை. கல்லாடனுர்,

எகரவிளக்கம்.

எழிலன் என்னும் பெயருக்கு முதலெழுத்து எகரம். ஆகையான் எகரமே பாலதானம்; ஒகரம் குமாரதானம்: அகரம் அரசதானம் இகரம் மூப்புத்தானம்; உகரம் மரணதானம். முதன் மொழியின் முன் வைக்கத் தக்க எழுத்துக்கள் எ. ஒ. அ. என்னும் மூன்றுமாம். நீக்கத்தக்க எழுத்துக்கள் இ. உ. என்னும் இரண்டுமாம்.

மேற்கோள்:

எகரக் கொகரம் அகர நட்பாகும்
இகரம் உதாசீன மாம்.

எகரந் தனக்குப் பகையென் றுரைப்ப
துகர எழுத்தென் றுணர்.

—கல்லாடனுர்.

ஒகரவிளக்கம்.

ஒயிலன் என்ற பெயருக்கு முதலெழுத்து ஒகரமாகையான் ஒகரமே பாலதானம்; அகரம் குமார தானம்; இகரம் அரசதானம்; உகரம் மூப்புத் தானம்; எகரம் மரணதானம்.

முதன்மொழியின் முன் வைக்கத் தக்க எழுத்துக்கள் ஒ. அ. இ. என்னும் மூன்றுமாம். நீக்கத்தக்க எழுத்துக்கள் உ. எ. என்னும் இரண்டுமாம்.

மேற்கோள்:

ஒகர எழுத்துக் ககர எழுத்தும்
இகர எழுத்தும்நட் பாம்.

ஒகரக் குகரம் உதாசீனமாகும்
எகரம் பகையாம் எனல்.

— கல்லாடனுர்.

பாலனே குமரன் மன்னன் படுமுதிர் கிழவன் சாவு
கோலுந்தன் பேரெழுத்துக் குறித்தது முதலாக் கொள்க
ஏலுமுன் னெழுத்து மூன்று மின்பம் பின்னிரண்டுந்தீதாம்
சாலுமு வசைச்சீர்தானே சாற்றிய கவிதைக் கின்பம்.

—சூடாமணிநிகண்டு.

குற்றெழுத்தைந்தும் ஒத்தநெட்டெழுத்தொடு
ஐ ஔ என்னும் ஆயீரெழுத்தை
இ உ என்னும் இரண்டொடும் சேர்த்திப்
பால குமார அரச விருத்தம்
மரணம் என்ன வகுத்திறை வன்பெயர்
முதலெழுத்தினை முதற் பொருத்த மாக
முதற்சீ ரிடத்து முதற்க ணின்ற
எழுத்தொடு தாக்கி இடமுதல் மூன்றும்
விழுத்தகு முப்பும் மரணமும் விலக்கே.

— இலக்கண விளக்கப்பாட்டியல்.

உதாரணம் :

சுப்பிரமணியன் என்னும் பெயராளருக்கு முன்னர்க்கூறிய பொருத்தங்கட்கு இயைய ஆய்ந்தெடுத்த எழுத்துக்களுள் சில வருமாறு :—

சொ. சோ. மெ. மே; ச. சா. சி. சீ.

இவ்வெழுத்துக்களுள் ஈண்டுகூறிய தானப்பொருத்தத் திற்கிணங்க முதற்சீரின் முன்னெழுத்தாக வைக்கத்தக்க எழுத்துக்கள் வருமாறு ;— சொ. சோ. மெ. மே.

நீக்கத்தக்க எழுத்துக்கள் : ச. சா. சி. சீ.

சுப்பிரம்ணியன் என்னும் பெயரின் முன்உள்ள 'சு' என்னும் உயிர்மெய்யெழுத்தில் உகர உயிர் இருத்தலான் உகரமே பால தானம், எகரம் குமாரதானம், ஒகரம் அரசதானம், அகரம் முப்புத்தானம், இகரம் மரணதானம். எனக்கொள்க.

சொ. சோ என்னும் இவ்விரண்டெழுத்துக்களிலும் முறையே ஒகர ஓகாரங்கள் ஏறியதால் இவ்வெழுத்துக்கள் நட்புக்குரிய அரசதானமாயின. ஆகையான் இவ்வெழுத்துக்களை முதற் சீரின் முன்வைக்கத் தக்க எழுத்துக்கள் எனக் கூறப்பட்டது.

மெ. மே என்னும் இவ்விரண்டெழுத்துக்களிலும் முறையே எகர ஏகாரங்கள் ஏறியதால் இவ்வெழுத்துக்கள் நட்பாகிய குமாரதானமாயின. ஆகையான் இவ்வெழுத்துக்களும் முதற் சீர்முன் வைக்கத் தக்க எழுத்துக்களேயாம்.

ச. சா என்னும் இவ்விரண்டெழுத்துக்களிலும் முறையே அகர ஆகாரங்கள் ஏறியதால் இவ்வெழுத்துக்கள் மூப்புத்தானம் பெற்று உதாசினமாயின. ஆகையான் இவ்வெழுத்துக்களை முதற்சீர் முன்வைத்தல் ஆகாவாம் என நீக்கப்பட்டது.

சி. சீ என்னும் இவ்விரண்டெழுத்துக்களிலும் முறையே இகர ஈகாரங்கள் ஏறியதால் இவ்வெழுத்துக்கள் மரணதானம் பெற்றுப் பகையாயின. ஆகையான் இவ்விரண்டெழுத்தையும் நீக்கப்பட்டது என அறிக.

ஏனைய எல்லா எழுத்துக்களுக்கும் இங்ஙனமே தானம் அமைத்துப் பொருந்தும் தானத்திற்குரிய எழுத்துக்களை ஆய்ந் தெடுத்துக் கொள்க.

இனிப் புட்பொருத்தம் இயம்புவாம்.

(வளரும்)

இராகம்: பிஹாக் தாளம்: ஆதி

பல்லவி

எந்தன் கலிதீர எளியேன் பிழைபொறுக்க
கந்தனே தாமதமேன் ஐயனே (எந்தன்)

அனுபல்லவி

இத்தருணத்திலே என்மேல் இரங்கி உன்
சித்தம் கனிந்திட பக்தனைக் காத்திட (எந்தன்)

சரணங்கள்

1) பொய்யும் களவுமாய் பொறாமையுமே கொண்ட
போல்லாத சூதெங்கும் சூழ்ந்துவரக் கண்ட
பூமியிற் பிறந்ததும் படும்துயரம் சகியேன்
பொற்பாத கமலத்தைப் பணிந்திடவே மறவேன் (எந்தன்)

2) எங்கும் நிறைந்திருக்கும் ஏகவைபோகனே
செங்கமலப் பதத்தை என்றும் தொழுதேனே
அங்கப் பிணியாவும் அகன்று செய்த வினைகள்
தங்காமல் ஓடிட மங்கல வாழ்வுற (எந்தன்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்

		ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை	... 0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	... 3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	... 3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) (புதிய பதிப்பு)	... 2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம்	... 2 00
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ..	... 1 30
7*	திருவாசகம் ,,	... 0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	... 2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	... 0 56
10*	திருமந்திரம் .. (புதிய பதிப்பு)	... 2 25
11	பதினோராந்திருமுறை .. (அச்சில்)	
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	... 0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	... 0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)	
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	... 0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	... 3 00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	... 1 75
18	கந்தபுராணம் - முதல் மூன்று காண்டங்கள் ..	... 2 75
19	.. யுத்த தேவகாண்டம் ..	... 2 00
20	.. தக்ஷகாண்டம் ..	... 1 50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	... 0 25
22	கந்தரனுபூதி	... 0 13
23	கந்தர் கலிவெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	... 0 37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	... 0 06
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் - உரையும்	... 0 37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	... 0 50
27	சகலகலாவல்லிமாலை - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	... 0 06
28	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	... 1 50
29	திருக்குறள் - பொருட்பால் ..	... 2 50
30	திருக்குறள் - காமத்துப்பால் ..	... 1 00
	௸ 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	... 4 00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	... 0 75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	... 0 13

Registered With the Registrar of Newspapers for India
Under No R. No. 1485/57
Regd No. M. 5574

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
34	திருவுசாத்தா ் கல்லெழுத்துக்கள்	...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
41	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
42	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
44	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
48	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
49	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
50	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
51	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
52	கந்தரனுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
53	திருவாரூர்-திருப்பனுவல்கள்	..	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
55	பழமொழித்திருமுறை	...	0 25
56	கோளறு திருப்பதிகம்	...	0 03

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"சிவகாரஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் - '62